ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராயநம:

# ஆர்யதர்மம்.

महिम्नामाम्नायः स्तुतिषु तव नालं पशुपते
तदस्मिन्नर्थेऽलं तनितुमधरस्पन्दमपि कः ।
तदप्याशा मेऽन्तर्वलति यदयुक्तास्फुटवचो
निगुम्भो डिम्भोऽपि प्रदिशति मुदं चेतसि पितुः ॥ स्तुतिपद्धतौ ।

மஹிம்நாமாம்நாய: ஸ்துதிஷு தவ நாலம் பஶுபதே
தத³ஸ்மிந்நர்தே²லம் தநிதுமத⁴ரஸ்பந்த³மபி க: ।
தத³ப்யாஶா மேந்தர்வலதி யத³யுக்தாஸ்பு²டவசோ
நிகு³ம்போ⁴ டி³ம்போ⁴பி ப்ரதி³ஶதி முத³ம் சேதஸி பிது: ॥
ஸ்துதிபத்³தௌ ।

ஹே பசுபதே! ஹே பரமேசுவா! உம்முடைய மகிமைகளை நன்கறிந்து போற்றும் விஷயத்தில் அநாதிகளாய் விளங்கும் வேதங்களும் சக்தியற்றவைகளே. இவ்விஷயத்தில் மற்றுமுள்ள எவர்தாம் தம் உதட்டை அசைப்பதற்குக்கூட அருகராவர். ஒருவராலும் உம்மை ஸ்துதிப்பதென்பது முடியாத கார்யமென்று நான் அறிந்தும் எனது ஆசையானது உள்ளத்தில் சுற்றுகின்றது இது தவறேயாகும். ஆனாலும் கேட்போர்களுக்கொன்றும் புரியாமல் பேசும் குழந்தையானது தன்வாக்கால் பிதாவினுடைய மனத்திற்கு எங்ஙனம் சந்தோஷத்தைக் கொடுக்கின்றதோ அங்ஙனமே உலகங்களுக்குப் பிதாவான உமக்கும் என்னுடைய ஸ்பஷ்டமான வாக்கும திருப்தியையுண்டுபண்ணும் என்று எமது துணிவு.

ஸ்ரீ பகவானுடைய மஹிமையின் பெருமை நன்கு அறிந்து துதிக்கவேண்டுமானால் அறிவிற்சிறந்த பண்டிதர்களுக்குக்கூட முடியாத காரியமாகும். நம்போன்ற அற்பபுத்தியையுடையவர்களுக்கு எப்படி ஸாத்தியமென்று கருதி அவ்வழி செல்லாமலிருப்பது சரியல்ல. பின்னை நமது புத்திக்கெட்டியவரையில் கபடமில்லாத உள்ளன்புடன் ஸ்தோத்திரம் செய்வோமாகில் புத்திரனின் மழலைச்சொல்லைச் செவியுற்ற தந்தைபோல் சகல ஜனங்களுக்கும் தந்தையான ஸ்ரீ மஹாதேவரும் சந்தோஷத்தையடைவா என்றும் அவரவரும் தம்சக்திக்கியன்றவாறு கடவுளை ஸ்துதிசெய்து நற்கதிபெறவேண்டுமென்று அறிவிக்கப்படுகின்றது.

உபபத்திராதிபர்.

# ஆர்யதர்மம்.

பிரபவஸூ சித்திரை-மீ ௨

## பதிவிரதா ஸ்திரீகள் இருக்கவேண்டிய முறை.

(௧௯௫-வது பக்கத்தொடர்ச்சி.)

**न गणिका धूर्ताभिसारिणी प्रव्राजिता**
**प्रेक्षणिका मायाकुहककारिका दुश्शीलादिभिस्सहैकत्र तिष्ठेत् ।**

ந கணிகா தூர்தாபிஸாரிணீ ப்ரவ்ரஜிதா
ப்ரேக்ஷணிகா மாயாகுஹககாரிகா துஶ்ஶீலாதிபிஸ்ஸ ஹைகத்ர திஷ்டேத் ।

தாஸீ, கெட்டகுணமுடையவள். கெட்டநடத்தையுடையவள். ஸந்யாஸவேடம்பூண்டவள். கண்டவிடங்களிலெல்லாம்குறிசொல்லுகிறவள். வஞ்சிக்கிறவள். துஷ்டஸ்வபாவமுடையவள். இவர்களோடு சேர்ந்து ஒரே இடத்தில் நிற்கக்கூடாது. என்று சங்கர் அபிப்பிராயப்படுகிறார். ஸ்திரீகள் தம்பதி உயிருடனிருக்கும்பொழுது ஸகலவிரதங்களையும் அவன்முகமாகவேதான் அநுஷ்டிக்கவேண்டும். அப்படி முடியாமல் நிர்ப்பந்தமாயிருந்தால் அவன் உத்திரவுபெற்றுத்தான்செய்யவேண்டும். தாமாகஇதுநல்ல காரியமென்று நினைத்து அவனுடைய அநுமதியில்லாமல் செய்யக்கூடாது. இவ்விதமே

**पत्यौ जीवति या नारी उपोष्य व्रतमाचरेत् ।**
**आयुष्यं हरते भर्तुः सा नारी नरकं व्रजेत् ॥**

பத்யௌ ஜீவதி யா நாரீ உபோஷ்ய வ்ரதமாசரேத் ।
ஆயுஷ்யம் ஹரதே பர்துஃ ஸா நாரீ நரகம் வ்ரஜேத் ॥

தன்பதி உயிருடனிருக்கும்பொழுது எந்த ஸ்திரீயானவள் உபவாஸமிருந்து விரதாநுஷ்டானம் செய்கிறாளோ அந்த ஸ்திரீயானவள் பர்த்தாவினுடைய ஆயுஸ்ஸை அபகரித்துவிடுகிறாள், அவளும் நரகத்தையடைகிறாள்.

अपृष्ट्वाचैव भर्तारं या नारी कुरुते व्रतम् ।
सर्वं तद्राक्षसान्गच्छेदित्येवं मनुरब्रवीत् ॥

அப்ருஷ்ட்வாசைவ பர்த்தாரம் யா நாரீ குருதே வ்ரதம் ।
ஸர்வம் தத்ராக்ஷஸாந்கச்சேதித்யேவம் மநுரப்ரவீத் ॥

ஸ்திரீ தன் கணவனிடம் உத்திரவுபெருமல் எந்த விரதத்தை அனுஷ்டானம் செய்கிருளோ அதினல் உண்டான பலம்பூராவும் ராக்ஷஸர்களேயடைகின்றது என்று மனு சொல்லுகிருர்.

बान्धवानां स्वजातीनां दुर्वृत्तं कुरुते तु या ।
गर्भपातं च या कुर्यात् न तां सम्भाषयेत्क्वचित् ॥
यत्पापं ब्रह्महत्याया द्विगुणं गर्भपातने ।
प्रायश्चित्तं न तस्यास्ति तस्यास्त्यागो विधीयते ॥

பாந்தவாநாம் ஸ்வஜாதீநாம் துர்வ்ருத்தம் குருதே து யா ।
கர்ப்பபாதம்ச யா குர்யாத் ந தாம் ஸம்பாஷயேத்க்வசித் ॥
யத்பாபம் ப்ரஹ்மஹத்யாயா த்விகுணம் கர்ப்பபாதநே ।
ப்ராயஶ்சித்தம் ந தஸ்யாஸ்தி தஸ்யாஸ்த்யாகோ விதீயதே ॥

தன் பந்துக்களுக்கும் ஸ்வஜாதி ஜனங்களுக்கும் எவள் கெடுதலே யுண்டுபண்ணுகிருளோ கர்ப்பத்தை மருந்து முதலானவைகளே ஸேவித்து அக்காலத்தில் எவள் கெடுத்துவிடுகிருளோ அவளிடம் ஒருஸமயமும் வியவகாரம் செய்யக்கூடாது. பிர்மஹத்தி செய்தால் எவ்வளவு பாபம் எற்படுமோ அதற்கு இருமடங்கு பாபம் கர்ப்பபாதனத்தில் எற்படுகின்றது. ஆகையால்கர்ப்பபாதனத்திற்குப் பிராயச்சித்தம் கிடையாது. அந்தஸ்திரீயை பரித்தியாகம் செய்யவேண்டும் என்று பராசர் கூறுகின்ருர்.

नारी खल्वननुज्ञाता भर्त्रा पित्रा सुतेन च ।
निष्फलं तु भवेत्तस्या यत्करोति व्रतादिकम ॥ मार्कण्डेयः ।

நாரீ கல்வநநுஜ்ஞாதா பர்த்ரா பித்ரா ஸுதேந ச ।
நிஷ்பலம் து பவேத்தஸ்யா யத்கரோதி வ்ரதாதிகம் ॥ மார்க்கண்டேய: ॥

நாரியானவள் தன் பதியிடமோ அல்லது பிதாவிடமோ புத்திரனிடத்திலோ அனுமதி பெருமல் விரதம் முதலிய கர்மாக்களே

அனுஷ்டிப்பதால் அவை பயனற்றவையாகுமென்று மார்க்கண்டேயர் அறிவிக்கிறார். மஹாபாரதத்திலும் பதிக்குப்பணிவிடை செய்த உத்தமமான ஸ்திரீக்கு சிறந்தபதப்பிராப்தியைக்கூறி பதி சுச்ரூஷை செய்யாமல் விரதாதிகளை அனுஷ்டித்த மற்றொரு ஸ்திரீக்கு அவ்விதம் கிடையாதென்று கூறப்பட்டிருக்கின்றது.

यमोऽथ लोकपालस्तु बभाषे पुष्कलं वचः ।
माशोचस्त्वं निवर्तस्व न लोकास्संति तेऽनघे ॥
स्वधर्मविमुखा नित्यं कथं लोकान् गमिष्यसि ।
दैवतं हि पतिर्नार्याः स्थापितस्सर्वदैवतैः ॥
मोहेन त्वं वरारोहे न जानीषे स्वदैवतम् ।
पतिमत्याः स्त्रिया लोके धर्मः पत्यनुवर्तनम् ॥

யமோऽத லோகபாலஸ்து பபாஷே புஷ்கலம் வச: ।
மாஶோசஸ்த்வம் நிவர்தஸ்வ ந லோகாஸ்ஸந்தி தேऽநகே ॥
ஸ்வதர்மவிமுகா நித்யம் கதம் லோகாந் கமிஷ்யஸி ।
தைவதம் ஹி பதிர்நார்யா: ஸ்தாபிதஸ்ஸர்வதைவதை: ॥
மோஹேந த்வம் வராரோஹே ந ஜாநீஷே ஸ்வதைவதம் ।
பதிமத்யா: ஸ்த்ரியா லோகே தர்ம: பத்யநுவர்தநம் ॥

லோகபாலகரான இயமனுனவர் பதிசுச்ரூஷைசெய்யாத பாலோகத்திற்கு வந்த ஒரு ஸ்திரீயிடம் ஹே தோஷமில்லாதவளே உனக்கு உத்தமலோகங்கள் கிடையாது. என்பேரில் வருத்தப்படாமல் நீ திரும்பிவிடு. உனக்குற்ற பதிஸேவைஎன்கிறதர்மத்திலிருந்தும் நழுவிய நீ உத்தமலோகத்தை எப்படி அடைவாய் ஸகல தேவதைகளாலும் ஸ்திரீகளுக்குப்பதியே தெய்வமாகக் கூறப்படுகின்றது. நீ அக்ஞானத்தால் உன் தேவதையை அறியவில்லை. பதியையுடைய ஸ்திரீக்கு உலகில் பதியைஅனுஸரித்து அவனுக்குப்பணிவிடை செய்வதே மேலானதர்மம். என்று கூறியிருக்கிறார். மனுவும் இல்விதமே சொல்லியிருக்கிறார்.

नार्चाजपतपो होमदानव्रतमखादयः ।
स्त्रीणां पतिव्रतानां तु पत्यौ जीवति किंचन ॥

तदाज्ञया तु कर्तव्यमकार्यमपि चेत्तया ।

पत्न्याप्याज्ञा तु कर्तव्या पतितस्य तु सर्वदा ॥ आश्वलायनः ।

நாவ்ருஜவ தவொ ஹொமொஹொநவ்ரதவோதய: ।

ஸ்த்ரீணாம் பதிவ்ரதாநாம் து பத்யௌ ஜீவதி கிஞ்சந ।

ததாஜ்ஞயா து கர்த்தவ்ய மகார்யமபி சேத்தயா ।

பத்ந்யாப்யாஜ்ஞா து கர்த்தவ்யா பதிதஸ்ய து ஸர்வதா ।

ஆஶ்வலாயந: ।

ஸ்திரீகளுக்கு பதிஜீவித்திருக்கும்பொழுது பூஜை, ஜபம், தவம், ஹோமம் தானம் விரதம் யாகம் முதலியவைகளில் யாதொரு அனுஷ்டானமும் கிடையாது கெட்டகார்யமாயிருப்பினும் பதியின் ஆக்ஞை ஏற்பட்டால் உடனே செய்யவேண்டும். அவன் பதிதனுயிருந்தாலும் அவனுடைய ஆக்ஞையை செய்யவேண்டியது அவசியம் என்று ஆச்வல்லாயனர் சொல்லுகிறார்.

இவ்விதம் சாஸ்திரங்களால் போதிக்கப்படும் தர்மதத்வத்தை சற்றும் கவனியாமல் புறக்கணித்து முற்காலத்தில் அனுஷ்டிக்க வேண்டிய தர்மங்களை இந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றனவென்றும் தற்காலத்திற்கு இவைகள் பொருத்தமில்லாதவைகள் என்றும் தங்களுடைய சூக்ஷ்மபுக்தியால் கண்டுபிடித்து எந்தெந்த ஸமயத்தில் எவ்விதம் தம்மனத்தில் தோன்றுகிறதோ அதெல்லாம் தர்மமென்று தாமாகக் கருதி பேபரிலும் பிரஸங்கங்களிலும்வெளியிட முன்வந்துவிட்டார்கள். இந்த ஆடம்பரத்தைக்கண்டு சிலர் மயங்கி அதர்மத்தைத் தர்மமென்று பிரமித்து அனுஷ்டிக்கவும் முயன்று பாபத்தை ஸம்பாதித்துக் கொள்ளுகிறார்கள். அந்தோ கலியின் கொடுமை, இதுவரையில் சிலபுருஷர்கள்மாத்திரம் காலத்திற்குறிய அதர்மசாஸ்திரம்சொல்லிவந்தார்கள். தற்காலம்தம்மை மேதாவிகளாகக்கருதிய சில ஸ்திரீகளும் தைர்யமாய் தர்மோபதேசம்செய்ய முன்வந்துவிட்டார்கள் இதைக்காட்டிலும் நம் தேசத்திற்குப் பெரும்பாக்கியம் வேறு என்னவேணும். கலியாசனின் பரிபூர்ணமான அனுக்கிரஹம் நம்தேசத்திற்கேற்பட்டுவிட்டது. எவ்விதமிருந்தாலும் ஆஸ்திகமஹாஜனங்கள் ஸநாதனதர்மத்தைக் கைவிடாமல் தம்மாலியன்றவரையில் அனுஷ்டித்து சிரேயஸ்ஸைப் பெறும்படியாய் அனுக்கிரகிக்கவேண்டுமாக ஸ்ரீ பகவானைப் பிரார்த்திக்கிறோம்.

உபபத்திராதிபர்.

# பிரம்மஸ்ரீ போலகம் சுந்திரசாஸ்திரிகளுடைய
# ஸ்ரீபகவத்கீதா உபன்னியாஸத்தின் சுருக்கம்.

( 192-ம் பக்கத்தொடர்ச்சி. )

போகத்தில் சொல்ப ஆசையிருப்பதால்தான் ஞானம்கை கூடாத யோகப்பிரஷ்டன் அசுவமேதாதி க்ருதுக்கள் செய்த வர்களடையும் ப்ரும்மலோகம் முதலிய புண்ணிய லோகங்களில் சென்று நீண்டகாலம் சுகமனுபவித்தபிறகு முன்செய்த தியான யோகத்தின் பலத்தினுலேயே மஹாபரிசுத்தர்களான அதாவது பிரும்மஞானத்திற்குறியவர்களான ஐசுவரியவான்களின் வீட்டில் பிறக்கிறுன். கொஞ்சமேனும் போகவாசனையில்லாத யோகியோ வெனில் சரீரம் விழுந்தவுடன் புண்ணியலோகம் செல்லாமல் சீக் கிரமாக பிரும்மஞானிகளின் வீட்டில்பிறக்கிறுன். இவ்விரண்டு பிறவியும் இவ்வுலகத்தில் மிகவும் அரிது.

அந்த ஜன்மாவில் யோகப் பிரஷ்டன் தூங்கி எழுந்தவன் போல் முயற்சியில்லாமலே பூர்வஜன்மத்தில் ஸம்பாதித்த தியான யோகத்தையடைந்து மறுபடியும் அதிகமாக ஞானலாபத்தைப் பெற முயற்சி செய்கிறுன். ஆதலால் இவன் பூர்வ ஜன்மங்களில் செய்த அப்பியாசப் பிரயத்தினங்கள் ஒருநாளும் வீணுகிறதில்லை. இவ்விரண்டு யோகிகளில் சக்கிரவர்த்தி குலத்தில் ஜனித்த யோகி அநேக புண்ணிய ஜன்மங்களுக்குப் பிறகு மனுஷ்ய சரீரத்தை யடைந்திருந்தாலும் வெகுவிதமான ராஜபோக விஷயங்களின் மத்தியத்தில் அகப்பட்டிருந்தாலும் வெகு ஜன்மங்களுக்கு முன் செய்த தியானயோக அப்பியாசத்தினுல் திடீரென்று தன்னையறி யாமல் ஞானமார்க்கத்திலிழுக்கப்படுகிறுன். ஞானத்தையடைய விருப்பமென்கிற முதல்படியிலுள்ளவனும் கர்மபந்தத்தையடைய மாட்டான் என்றுல் வெகுகாலம் தியானயோகம் செய்தவனுக் குக் கர்மபந்தம் அணுகாது என்பதில் என்னசந்தேஹம். பூர்வாப் பியாச ஸம்ஸ்காரத்தால் விஷயங்களினின்றும் இழுக்கப்படுகிறுர் கள் என்பதற்கு சாக்ஷி நீயே. யுத்தம் செய்ய சன்னத்தமாயி ருக்கும் நீ,விஷயங்களினின்று விடுபட்டுஎன்னை ஆத்மோபதேசம் செய்யச்சொல்லுகிறுய். இதற்குக் காரணம் உன் பூர்வாப்பியாச வாசனையே. இப்படி யோகாப்பியாசியானவன் பிரயத்தனம்

செய்யச் செய்ய விசாரணை நிதித்தியாசனம் முதலிய படிகளின் துவாரா அநேக ஜன்மங்களில் யாதொரு பிரதிபந்தமுமின்றி ஞானத்தையுடையவனாகி உத்தம கதியை அடைகிறான். 32வது ச்லோகத்தில் சொல்லப்பட்ட பரமயோகி, தபஸ்விகளைக் காட்டிலும், சாஸ்திர ஞானமுள்ளவர்களைக் காட்டிலும், கர்ம யோகிகளைக்காட்டிலும் அதிகமானவன் என்று எண்ணப்படுகிறான். அர்சுனா! அப்படிப்பட்ட யோகியாக நீ ஆகவேண்டும்.

கடைசி ச்லோகத்தில் மத்யமஷட்கமாகிற பக்தியோகத்தைப்பற்றி சொல்லப்போகிறார் என்பதை ஸூசிப்பிக்கிறார். பக்தி என்பது ப்ரேமம். இந்த ப்ரேமை குரு தெய்வம் இவர்களிடத்திலிருந்தால் அதை பக்தியென்று சொல்லுகிறோம். என்னையே வெளிப்படையாகவும், முழுமனதுடனும் மிகுந்த சிரத்தையுடனும் எவன் பஜிக்கிறானோ அவன் தேவதா பக்தி யோகம் பெற்றவர்களுக்குள் பரமசிரேஷ்டன்என்பது என்னுடைய மதம். கர்மயோககர்மஸந்யாஸாதி யோகங்களை நிரூபித்த பின் பக்தி யோகத்தை ஸ்ரீபகவான் நிரூபணம் செய்ய ஆரம்பித்திருப்பதால், கர்ம யோகாதிகளின் அனுஷ்டானத்தினால் உண்டாகிற சித்த சுத்தியுள்ளவனே பக்தியோகத்திற்கு முக்கிய அதிகாரியாவன் என்பது வியக்தமாகிறது.

(தொடரும்) வி. என். ராமநாதன்.

---

# ஆன்ஹிககர்மம்.

---

(கருச-வது பக்கத்தொடர்ச்சி)

பஞ்சாக்ஷர ஸூர்ய நமஸ்காரம்

ஸந்தியாவந்தனமான பிறகு சிலகாம்யமான ஜபம் கூறப்பட்டுளது. யஜுர்வேதிகளுக்கு ஸ்ரீருத்ரம் சமகம் புருஷசூக்தம் நவக்ரஹமந்திரம் பஞ்சசாந்தி முதலியவைகளை ஜபிக்கவேண்டும் பாபங்களை யகற்றுவதோடு ஆரோக்யம் ஐஸ்வர்யம் முதலியவைகளைக் கொடுக்கக்கூடியன. அன்றியும் அவரவர் ஸம்ப்ரதாயப்படி சிற்சில மந்திரங்களை ஜபிப்பதுண்டு. ஆணோ பெண்ணோ ஸ்மார்த்தர்களானால் பஞ்சாக்ஷரீ சூர்ய நமஸ்காரமில்லாமலிருக்கமாட்டார்கள், சிஷ்டர்கள் அவ்வுபதேசமாகாதவர் கையால் செய்யப்

படும் பாகத்தை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். வைஷ்ணவர்கள் ப்ரபத்திக்கேற்ற ஒரே தைவமான மஹாவிஷ்ணுவின் அஷ்டாக்ஷரியை ஜபியாமலிரார். காயத்ரிக்கு அடுத்தபடியாக இம்மந்திரங்கள் போற்றுவதற்கேற்றவை. பஞ்சாக்ஷரமும் யஜுர்வேத ஸம்ஹிதையில் மத்யத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. முன்னும் பின்னும் மும்மூன்று காண்டங்களிருக்க, இடையிலுள்ள நாலாங் காண்டத்தில் முன்னும் பின்னும் சிலப்ரச்நங்களிருக்க, ஐந்தாவதில் பல அநுவாகங்களுக்கிடையான எட்டாவதில் மத்யரத்னம் போல் அழகாக அமைக்கப்பட்டுளது. விலையுயர்ந்த பொருளை எப்படி நடுவீட்டில் இரும்புப்பெட்டியில் வைத்து பூஜா கிருஹத்தில் வைப்போமோ அப்படியே பகுஜாக்ரதையாக வைக்கப்பட்ட பஞ்சாக்ஷரத்தின் பெருமை வாக்கிலடங்காது.

ஸந்தியோபாஸனையால் சூர்யனை உபாஸித்தாலும் ஆரோக்யத்தை விரும்புவோர் ஒளிநிறைந்த சூர்யபகவானை உபாஸிக்க வேண்டும் எனக்கூறப்படுவதால் ஆயுளுள்ளவரை சரீரம் கர்மாநுஷ்டானங்களைச் செய்யவும் வியாதியில்லாமலிருக்கவும் அவரை வணங்குவது அவசியமாகும். வேதமறிந்தோர் அவகாசமும் சிரத்தையுமுள்ளோர் அருணத்தில் முதல் ப்ரச்னத்தை ஒவ்வொருபஞ்சாசத்தாகக்கூறி நமஸ்கரிப்பது வழக்கம். இன்றளவும் மலையாள தேசத்தில் ப்ரதிதினம் இவ்வாறு நூற்றுக்கு அதிகமான நமஸ்காரம்செய்வோரைக் காணலாம். அதிருஷ்டபலம் ஒருபக்கமிருக்க ப்ரத்யக்ஷபலமாக ஆரோக த்ருடகாத்ரத்தையுண்டுபண்ணுவதைக் காணலாம். பன்முறைப் பணிந்து எழுந்திருப்பதே தேகப்பயிற்சி என மதாபிமானமில்லாத மதத்தையறியாத தற்காலத்தவரால் அநுஷ்டிக்கப்படுசிறது. நல்ல ரத்தோட்டத்தால் பலவிருத்தியாவதைக் கண்ட மஹரிஷிகள் "சாஸ்த்ராயச, சுகாயச" என இதை விதித்தனர் போலும்.

## ஹோமம்.

ஸ்நாநஸந்தியா ஜபங்களுக்குப் பிறகு ஹோமம் விதிக்கப்பட்டிருக்கிறது. அக்னியில் மந்த்ரபுரஸ்ஸரமாக விதிக்கப்பட்டுள்ள திரவியத்தை ஆஹுதி செய்வது ஹோமம். இவ்வக்னி சிரௌதாக்னி ஸ்மார்த்தாக்னி லௌகிகாக்னி என மூவ்வகைப்

படும். பிராம்மணர்களுக்கு அக்னியில் தான் ஸகல தேவர்களையும் அர்ச்சிக்கும்படி விதிக்கப்பட்டிருக்கிறது. வேதத்தில் முக்கால் பாகம் கர்மாவையே கூறுகிறது. அக்கர்மாவே, யாகமெனப்படும். அந்த யாகத்திற்காக, வேதோக்தமாக அக்ன்யாதானம் செய்துகொண்டு, அரணி எனும் அரசங்கட்டையிலிருந்து கடைந்தெடுக்கப்பட்டது. சிரௌதாக்னி கார்ஹபத்யம் ஆஹவனீயம் தக்ஷிணாக்னி என, அது மூன்றிடத்தில் விதிப்படி அமைக்கப்பட்ட வேதியின் அருகிலுள்ள ஆயதநங்களில் அமைத்து ஹோமம் செய்யத்தக்கது. கார்ஹபத்யமென்றவிடத்தில் எப்போதும் அக்னியிருந்துகொண்டே யிருப்பதால் அது மூலஸ்தானமாகும். சூர்ய உதயத்திற்கும் அஸ்தமனத்திற்கும் முன்னே கார்ஹபத்யத்திலிருந்து ஆஹவனீயதக்ஷிணாக்னி ஸ்தானங்களுக்கு அக்னியைக்கொண்டு வைப்பது "ப்ரணயனம்" என்ற கர்மாவாகும். ஸந்தியாநுஷ்டானத்திற்குப் பிறகு இந்த ஹோமத்தைச் செய்ய வேண்டும். இக்கர்மகாலத்தில் ஸகல தேவர்களும் வருகின்றனர் மழை முதலிய மநுஷ்ய லோகத்திற்கு வேண்டிய ஸகலஸம்பத்தையுமளிக்கின்றனர். வேதத்தின் பயனே அக்னிஹோத்திரமெனக் கூறப்படுகிறது. ஒவ்வொரு பிராமணனும் இதை அவசியம் அநுஷ்டிக்கவேண்டும்.

பிறகு ஸ்மிருதிவிஹிதமான கர்மாக்களைச் செய்யத்தக்க அக்னி ஸ்மார்த்தாக்னி எனப்படும். இது விதிப்படி பிரம்மசர்யத்தை முடித்து, விவாஹத்தன்று ஆரம்பிக்கப்படுவதாம். இதே ஔபாஸனாக்னி எனப்படுகிறது. விவாஹம் முதல் சரீரபாதம் வரை கட்டாயமாக ஒவ்வொரு க்ருஹஸ்தனும் உபாஸிக்கவேண்டியது. இதில் அதிக சிரமமும் கிடையாது. பகலில் சூரியனையும் இரவில் அக்னியையும் ஸ்விஷ்டக்ருத்துடன் கூட தண்டுலத்தால் ஹோமம் செய்து ஸந்தோஷிப்பிக்கிறோம். பூர்வாங்க உத்திராங்கமாக சிலவை கூறப்பட்டிருக்கின்றன. தான் அவசரமாகச் செல்ல வேண்டியிருப்பின் மனைவி கூட இதைச்செய்யலாம். சிரத்தை ஒன்றுமட்டிலுமிருந்தால் இதைச் செய்வது ஒரு பெருங் கஷ்டமான கார்யமல்ல. அக்னி உபாஸனையால் ஐசுவரியம் அதிகமாக வளர்கிறதென தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன. அக்னியை உபாஸியாவிடின் அது ஆயுளை அபகரிக்கும். பிரம்மசாரிகள் ஸமிதாதானம் செய்யவேண்டும். அக்னியில் விதிப்படி செய்த ஹோமம்

ஆதித்யனிடம் சென்று அங்கிருந்துமழையாக மாறுகிறதெனமநு முதலியவர்கள் சொல்கின்றனர். இது தற்கால ஆராய்ச்சிக்கு மிகவும்ஒத்ததாக இருக்கிறது. ஆதலால் சாஸ்திரநம்பிக்கையுள்ளோர் விடாமல் அநுஷ்டிப்பது தனக்கே மாத்திரமின்றி, தன் நாட்டிற்கும் க்ஷேமத்தைத் தேடுவதாகும். அதைச்செய்ய முடியாதவிடத்தில் மந்திரபடனமாவதுசெய்வதுஉசிதமும் அவசியமுமாகும். காம்யமான சில ஹோமங்கள் வெறும் லௌகிகாக்னியென்ற ஸாதாரண அக்னியில் விதிக்கப்பட்டிருக்கிறது.

## ஹோமவிதி.

இரண்டு வேளைகளிலும் ஸந்தியாநுஷ்டானத்திற்கு அடுத்த ஸமயமே ஹோமகாலம். எக்காரணத்தாலோ அவசியம் அச்சமயம் தவறும்படி நேர்ந்தால் ஆபத்காலமாக அடுத்தஹோமகாலம் வரை ஹோமம் செய்யலாம். ஹோமத்திற்கு உத்தமமான ஸமித் பலாசமாகும். அஃது கிடைக்காதவிடத்தில், அரசு, அத்தி, துளஸீகாஷ்டம் முதலியவைகளை உபயோகிக்கலாம். ஸமித்துகள் அதிகஸ்தூலமும் உதவாது. மெல்லியதும் உதவாது. தோலில்லாததும் பத்து அல்லது எட்டுஅங்குலத்திற்குக் குறைந்ததும் ஹோமார்ஹமல்ல. ப்ரோக்ஷிக்காமல் எதையும் அக்னியில் போடக்கூடாது. அக்னியைக்கையால் தொடக்கூடாது. வாயால் ஊதக்கூடாது. கையாலோ காலாலோ தாண்டக்கூடாது. சுத்தமான ஆஜ்யத்தால் ஆஹுதிசெய்யவேண்டும். நாற்றமும் கொழுப்புங்கலந்த கடைநெய்யால் செய்யும் ஆஹுதி பலனை அளிக்காததோடு விபரீதத்தையும் உண்டுபண்ணும். ஆதலால் மிகபக்தி ச்ரத்தையுடன், விதிதவறாமல் ஸ்வர அக்ஷரப்பிழையின்றி, ஹோமம் செய்யவேண்டும். புகையும்போதும் அடியோடு அவிந்தபோதும் ஹோமம் செய்யக்கூடாது. ஸமித் முதலியவைகள் நன்கு அக்னியாக அலர்ந்து தணலானபோதே ஹோமம் செய்யவேண்டும். ஹோமம்செய்தபொருள் நன்கு பாகமாகும்படி பார்க்கவேண்டும். இல்லையேல் யஜமானனுக்கு குல்மநோய் உண்டாகும். எந்த தேவதையைக்குறித்து எந்தமந்திரத்தைச் சொல்லுகிறோம். அதன்பொருளென்ன என்பதை அறிந்துசெய்யும்ஹோமமே ஸரியானதாகும். இந்திரனைக் கொல்லும்படியான புத்ரன் ஜனிக்கவேண்டுமென ராக்ஷஸர்கள் ஆஹுதிசெய்யும்போது ஸ்வரம் தவறியதால் இந்திரனால் கொல்லத்தக்க தநயன் பிறந்தான்.

அக்னிமூலமாகவே ஸகலபலன்களையும் பெற்றுவந்தனர் நமது மூதாதைகள், அவ்வக்னிபூஜையைவிட்டதால்தான் நம்மவர்படும் பாடு நாவால் வர்ணிக்கமுடியாமலிருக்கிறது. ஹோமம்செய்த பொருள் என்னுடையதல்ல என்பதே உத்தேசத்யாகமாம்.

ஹோமத்திற்குப்பிறகு தூர்வை, நெய், தயிர், ஜலபாத்ரம் தாயுடன் கூடினதேனு, விருஷபம் சுவர்ணம், மது, பிராமணகன்னிகை, கண்ணாடி, சந்தனம், ஸூர்யன், அச்வத்தவிருக்ஷம், அக்னிஹோத்ரி, கடல், அன்னதாதா, கரும்பு, வெண்மையான புஷ்பங்கள் கறுத்தபூனை இவைபோன்ற மங்களத்ரவ்யங்களை தர்சித்துப் பெரியோர்களை வணங்கவேண்டும். அப்படிச்செய்பவர்தீர்க்காயுளைப்பெறுவர். தாய்தந்தை குருமுதலியவர்களுக்கு ஸாஷ்டாங்கப் ரணாமம் பிரதக்ஷிணத்துடன் செய்யவேண்டும். பெரியோர்வரும் போது நமதுப்ராணசக்தி எழுந்திருக்கிறது. அதை அடக்க எழுந்து பணிந்து வணங்குவன மனுகூறுகிறார். பெரியோர்மனங் குளிர்ந்து செய்யும் ஆசீர்வாதத்திற்கு எவ்வளவு பயனுண்டென மார்க்கண்டேய சரிதம் விளக்குகிறது.

## ப்ரும்மயக்ஞம்.

ஒவ்வொரு பிராமணனும் பிறக்கும்போது மூன்று கடனுடன் பிறக்கிறான். ரிஷிகளிடமும் தேவர்களிடமும் பித்ருக்களிடமும் பட்ட கடன்களாம் அவை. இக்கடன்களை நீக்கிய பிறகே ஒவ்வொரு ஜீவனுக்கும் கடைசியான இடமும்பரமபுருஷார்த்தமுமான மோக்ஷத்தையடையப்ராவிருத்திக்கவேண்டும். அதாவது இக்கடனைநீக்கநாம், செய்யும் வேலைகளே நம்மை மோக்ஷமார்க்கத்தில் கொண்டுவிடும். அவைகளுள் ப்ரும்மசர்யத்தால் ரிஷிகள்கடன் தீரும். ப்ரும்மஎன்பதுவேதம். சர்யம்என்பதுஅதை அப்யஸித்தல். ஆதலால் வேதாத்யயனத்தை நியமத்துடன் கற்பது பிரும்மசர்யமெனப்படும். நியமந்தவராமல் வேதாப்பாஸம் செய்து, ரிஷிகள் கடனைத் தீர்க்கவேண்ம். அதேபோல் வேதோக்தமான யாகங்களைச் செய்து தேவர் கடனையும், ஸத்புத்ரனை க்ரமப்படி உண்டுபண்ணி பிதிருக்கள் கடனையும் தீர்க்க்வேண்டும் என்பது வேதவிதியாகும்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

---

# ஸ்மிருதி செய்தவர்களின் ஆராய்ச்சி.

பராசரர்—

कल्पे कल्पे क्षयोत्पत्या ब्रह्मविष्णुमहेश्वराः ।
श्रुतिस्मृतिसमाचारनिर्णेतारश्च सर्वदा ॥

கல்பே கல்பே க்ஷயோத்பத்யா ப்ரஹ்மவிஷ்ணுமஹேச்வரா: ।
ச்ருதிஸ்ம்ருதிஸமாசாரநிர்ணேதாரச்ச ஸர்வதா ॥

பிரதிகல்பத்திலும் அழிவும் உத்பத்தியும் ஏற்படுவதால் பிர்மா விஷ்ணு மகேசுவரரும் சுருதிஸ்மிருதியும் இவைகளை வரையறுத்தவர்களும் அடிக்கடி அழிகிறார்கள் உண்டாகிறார்கள் என்றார். இங்கு கவனிக்கத்தக்கது இது. கல்ப்பம்தோறும் பிரளயமுண்டாவது நிச்சயம். அதில் மும்மூர்த்திகளும் அழிவதும்நிச்சயம். மும்மூர்த்திகளே இவ்விதமென்றால் சுருதியையும் ஸ்மிருதியையும் அதை இயற்றியவரையும் பற்றிக்கேட்கவும் வேண்டுமோ. ஆனால் உத்பத்திகாலத்தில் மும்மூர்த்திகளே சிருஷ்டிஸ்திதிஸம்ஹாரமென்னும் முத்தொழிலுக்காக முன்னம் தோன்றுகின்றனரென்பதே துணிபு. அம்மும்மூர்த்திகளும் அழிவற்றவர்களென்றும் பிரளயகாலத்தில் நம்போன்றவர்களின் பார்வைக்கு அழிந்ததாய் வ்யவகாரம் செய்துகொண்டாலும் அவர்கள் அந்தரூபத்துடனே தான் உத்பத்தியில் தோன்றுகின்றார்களென்று சொல்வதுபோலவேதான் சுருதிமுதலியவைகளும் கல்பப்பிரளயத்திலழிந்தும் உத்பத்தியில் தலைதூக்கியும் நிற்கிறதென்றும் சுருதிஸ்மிருதிகளுக்கு மாறுதலில்லையென்றும் கொள்ளவேண்டுமென்பதை உறுதிப்படுத்துவதற்காகவே பிர்மவிஷ்ணு மகேசுவரர்களுடன் சேர்த்தேகூறினர். ஆதல்பற்றியே-

न कश्चिद्वेदकर्ता च वेदं श्रुत्वा चतुर्मुखः ।
तथैव धर्मान् स्मरति मनुः कल्पान्तरान्तरे ॥

ந கச்சித்வேதகர்த்தா ச வேதம் ச்ருத்வா சதுர்முக: ।
ததைவ தர்மாந் ஸ்மரதி மநு: கல்பாந்தராந்தரே ॥

வேதத்திற்குக் கர்த்தா ஒருவருமில்லை நான்முகன் வேதத்தைக் கேட்டு அப்படியே ஒவ்வொருகல்பம்தோறும் அதனது தர்மங்களை நினைக்கிறார் என்றார். அதாவது பிர்மன் உதித்ததும் தான் யாரென்றும் எதற்காக இங்கு வந்தோமென்றும் தோன்றாதவராய் திகைத்து நிற்கும்போது பரமேசுவரனால் ஓதப்பட்ட வேதசப்தத்தைக்கேட்டார். ஆகல்பற்றியே சுருதியென்றாயிற்றென்று முன்னமேகூறிவிட்டேன். பிறகு அதிலுள்ள தர்மங்களை நினைத்து நினைத்து ஸ்வாயம்புவ மனுவாய் இருந்து எழுதிவைத்தார். அதனால் ஸ்மிருதியாயிற்று.

प्रजापतिर्हि प्रजास्सृष्ट्वा तासां स्थितिनिबन्धनं त्रिवर्गस्य साधनं अध्यायानां शतसहस्रेण अग्रे प्रोवाच तस्य एकदेशिकं मनुः स्वायंभुवो धर्माधिकारिकं पृथक्चकार बृहस्पतिरर्थाधिकारिकं महा-देवानुचरश्च नन्दी सहस्रेणाध्यायानां पृथक्कामसूत्रं प्रोवाच ॥

𑌪𑍍𑌰𑌜𑌾𑌪𑌤𑌿𑌰𑍍𑌹𑌿 𑌪𑍍𑌰𑌜𑌾𑌸𑍍𑌸𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌤𑌾𑌸𑌾𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿𑌨𑌿𑌬𑌨𑍍𑌧𑌨𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌰𑍍𑌗𑌸𑍍𑌯 𑌸𑌾𑌧𑌨𑌂 𑌅𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌾𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣 𑌅𑌗𑍍𑌰𑍇 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 𑌤𑌸𑍍𑌯 𑌏𑌕𑌦𑍇𑌶𑌿𑌕𑌂 𑌮𑌨𑍁𑌃 𑌸𑍍𑌵𑌾𑌯𑌂𑌭𑍁𑌵𑍋 𑌧𑌰𑍍𑌮𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌕𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌚𑌕𑌾𑌰 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌰𑌰𑍍𑌥𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌿𑌕𑌂 𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌾𑌨𑍁𑌚𑌰𑌶𑍍𑌚 𑌨𑌨𑍍𑌦𑍀 𑌸𑌹𑌸𑍍𑌰𑍇𑌣𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑌾𑌨𑌾𑌂 𑌪𑍃𑌥𑌕𑍍𑌕𑌾𑌮𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌵𑌾𑌚 ॥

பிர்மா பிரஜைகளை ஸ்ருஷ்டித்து அவர்கள் நன்குவாழும்பொருட்டு அறம்பொருள் இன்பமென்னும் மூன்று புருடார்த்தங்களுக்கு சாதகமான சாத்திரத்தை லக்ஷம் அத்யாயத்துடன் எழுதிவைத்தார். பிறகு மனுவந்தவுடன் அதன் ஏகதேசபாகமான தர்மத்தின் சாத்திரத்தை தனிப்படுத்தினர். அர்த்தாதிகாரசாத்திரத்தை பிருகஸ்பதி வேறுபடுத்தினர். மகாதேவரது பார்ஷதரான நந்தி என்பவர் காமசாத்திரத்தின் சூத்திரங்களை 1000 அத்தியாயமாய்ப் பகர்ந்தனர் என்றுவாத்ஸ்யாயனர் மகரிஷி கூறியவாறு ஸமஸ்த சாத்திரங்களுமே பிர்மனிடத்திலிருந்துதான் வந்ததென்றாகிறது. இதனாலும் ஸ்மிருதியும் காலத்தை ஒட்டி எழுதப்பட்டதல்லவென்பது விளக்கமாயிற்று. இனி இங்கு ஆசங்கைநிகழலாம்.

மனுதான் பிர்மபுத்திரராய்ப் பிறந்தார். பிர்மனிடமிருந்து அவர் தர்மங்களைக்கற்றிருக்கலாம் இனி மற்ற மகரிஷிகளால் எழுதப்பெற்ற தர்மசாத்திரங்களும் பிரமாணமாவ தெவ்விதமென்று இங்கு கூறுவாம். உண்மையே நாம் எல்லா மகரிஷிகளின்வாக்கியங்களையும், பிரமாணமாய் எடுத்துக்கொள்ளவில்லை. எல்லா மகரிஷிகளும் இஷ்டப்படியெல்லாம் எழுதிவைத்து விடவுமில்லை. ஆனால் சிலரே எழுதினர். அவைகளைத்தான் பிரமாணமாய்க் கொள்வாம். அவர்களாவன—யாக்ஞவல்கியர்.

मन्वत्रिविष्णुहारीतयाज्ञवल्क्योशनाङ्गिराः ।
यमापस्तम्बसंवर्ताः कात्यायनबृहस्पती ॥
पराशरव्यासशंखलिखिता दक्षगौतमौ ।
शातातपो वसिष्ठश्च धर्मशास्त्रप्रयोजकाः ॥

மன்வத்ரிவிஷ்ணுஹாரீதயாஜ்ஞவல்க்யோஶநாங்கிரா: ।
யமாபஸ்தம்பஸம்வர்தா: காத்யாயநப்ருஹஸ்பதீ ॥
பராஶரவ்யாஸஶங்கலிகிதா தக்ஷகௌதமௌ ।
ஶாதாதபோ வஸிஷ்டஶ்ச தர்மஶாஸ்த்ரப்ரயோஜகா: ॥

மனு, அத்ரிவிஷ்ணு ஹாரீதர் யாக்ஞவல்கியர், உசநஸ், அங்கிரஸ், யமன், ஆபஸ்தம்பர், ஸம்வர்த்தர், காத்யாயனர், பிருகஸ்பதி, பாராசரர், வ்பாசர், சங்கர், லிகிதர், தக்ஷர், கௌதமர், சாதாதபர், வஸிஷ்டர், ஆகிய 20 பெயர்களும் தர்மசாஸ்திரங் களியற்றியவர்கள் என்கிறார். ஸ்மிருதி ரத்தினத்தில் மனு, பிருகஸ்பதி, தக்ஷர், கௌதமர், அங்கிரஸ், யோகீசுவரர், ப்ரசேதஸ், சாதாதபர், பராசரர், ஸம்வர்த்தர், உசநஸ், சங்கரர், லிகிதர், அத்ரி, விஷ்ணு, ஆபஸ்தம்பர், ஹாரிதர், இப்பதினெண்மரும் தர்மசாஸ்திர மியற்றியவர்கள் என்கிறார். இதனால் முன் பின் விரோதமில்லை. இவர் பதினெண்மரைக்குறித்தபோதிலும் யாக்ஞவல்கியர் கூறிய 20 பெயரைத்தடுக்கவில்லை. இத்தகையரிஷிகள் லோகார்த்தமாகவே பாடுபட்டுத் தவம் புரிந்து தர்மங்களைக் கண்டு உலகமுய்யுமாறு எடுத்தோதினர். ஆதல்பற்றியேஇவர்கள் பற்பல விடங்களிலிருந்து தர்மசாஸ்திரத்தை வரைந்தபோதிலும் அனாதிஸித்தபாரம்பரையாய் வந்துகொண்டிருக்கும் சுருதி தர்மத்

தை ஒத்ததாகவே இருக்கின்றன. இதுகொண்டு மனு மட்டிலும் தான் தர்மத்தைத் தன் தந்தையினிடமிருந்தும் தெரிந்துகொண்டாரென்றெண்ணுவது உசிதமாகாதென்கிறோம். உலகில் 18 ஸ்மிருதிகள் என்று சொல்வதற்கு ஸ்மிருதிரத்நம் பிரமாணமாய் நிற்கிறது. இனி உபஸ்மிருதி கர்த்தர்கள் பதினெண்மராம்.

அவர்களாவன — அங்கிரஸ் —

जाबालिर्नाचिकेतश्च स्कन्दो लोकाक्षिकाश्यपौ ।
व्यासस्सनत्कुमारश्च शन्तनुर्जनकस्तथा ॥
व्याघ्रः कात्यायनश्चैव जातुकर्णिः कपिञ्जलः ।
बोधायनश्च काणादः विश्वामित्रस्तथैव च ॥
पैठीनसिर्गोभिलश्चेत्युपस्मृतिविधायकाः ॥

ஜாபாலிர்நாசிகேதஶ்ச ஸ்கந்தோ லோகாக்ஷிகாஶ்யபௌ ।
வ்யாஸஸ்ஸநத்குமாரஶ்ச ஶந்தநுர்ஜநகஸ்ததா ॥
வ்யாக்ர꞉ காத்யாயநஶ்சைவ ஜாதுகர்ணி꞉ கபிஞ்ஜல꞉ ।
போதாயநஶ்ச காணாத꞉ விஶ்வாமித்ரஸ்ததைவ ச ॥
பைடீநஸிர்கோபிலஶ்சேத்யுபஸ்ம்ருதிவிதாயகா꞉ ॥

ஜாபாலிநாசிகேதர்ஸ்கந்தர்லோகாக்ஷிகாசியபர், வியாஸர், ஸனத்குமாரர், சந்தனு, ஜனகர், வ்யாக்ரர், காத்யாயனர், ஜாதுகர்ணி, கபிஞ்ஜலர், போதாயனர், காணாதர், விசுவாமித்திரர், பைடீனஸி கோபிலர் ஆகிய இவர்கள் உபஸ்மிருதி செய்தவர்களாம். சங்கர் இதையே ஏற்றுக்கொண்டார். 21-பெயர்கள் ஸ்மிருதிகர்த்தாக்களென்றே பெரும்பாலரின் கூற்று 18-ஆயினும் 21-ஆயினும் நமக்கு விரோதமில்லை. ஏனெனில் எத்துணை பெயர்களாயினும் தர்மம் மாறுதலென்பதே கிடையாது. இங்கு ஸ்மிருதி உபஸ்மிருதி என்றதனால் வேதத்திற்கடுத்தபடி ஸ்மிருதி என்றும் அதற்கடுத்தது உபஸ்மிருதி என்றும் அறியத்தக்கது. இனி அக்கினிவேசியர்

बोधायनं आपस्तम्बं सत्याषाढं द्राह्यायणं अगस्त्यं शाकल्यमाश्वलायनं शाम्भवीयं कात्यायनं इति नवानि पूर्वसूत्राणि वैखानसं शौनकीयं भारद्वाजमग्निवेश्यं जैमिनीयं माधुन्यं माध्यन्दिनं कौण्डिन्यं कौषीतकिमिति नवान्यपरसूत्राणि अष्टादशसंख्याकाश्शारीरा स्संस्कारा इति ॥

𑌬𑍌𑌧𑌾𑌯𑌨𑌂 𑌆𑌪𑌸𑍍𑌤𑌮𑍍𑌬𑌂 𑌸𑌤𑍍𑌯𑌾𑌷𑌾𑌢𑌂 𑌦𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌯𑌣𑌂 𑌅𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌂 𑌶𑌾𑌕𑌲𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌵𑌲𑌾𑌯𑌨𑌂 𑌶𑌾𑌮𑍍𑌭𑌵𑍀𑌯𑌂 𑌕𑌾𑌤𑍍𑌯𑌾𑌯𑌨𑌂 𑌇𑌤𑌿 𑌨𑌵𑌾𑌮𑍀 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌵𑍈𑌖𑌾𑌨𑌸𑌂 𑌶𑍌𑌨𑌕𑍀𑌯𑌂 𑌭𑌾𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌮𑌾𑌗𑍍𑌨𑌿𑌵𑍇𑌶𑍍𑌯𑌂 𑌜𑍈𑌮𑌿𑌨𑍀𑌯𑌂 𑌮𑌾𑌧𑍂𑌨𑍍𑌯𑌂 𑌮𑌾𑌧𑍍𑌯𑌨𑍍𑌦𑌿𑌨𑌂 𑌕𑍌𑌣𑍍𑌡𑌿𑌨𑍍𑌯𑌂 𑌕𑍌𑌷𑍀𑌤𑌕𑌮𑌿𑌤𑌿 𑌨𑌵𑌾𑌪𑍍𑌯𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶 𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌨𑌿 𑌅𑌷𑍍𑌟𑌾𑌦𑌶𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌕𑌾𑌶𑍍𑌶𑌰𑍀𑌰𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑌾 𑌇𑌤𑌿।

போதாயனம் ஆபஸ்தம்பம், ஸத்யாஷாடம், த்ராஹ்யாயனம், அகஸ்தியம் சாகல்யம், ஆசுவலாயனம், சாம்பவீயம், காத்யாயனம், இந்த 9-ம் பூர்வசூத்ரங்கள். வைகானஸம், சௌனகீயம், பாரத்வாஜம், ஆக்னிவேசியம், ஜைமினீயம், மாதுன்யம், மாத்யந்தினம், கௌண்டின்யம், கௌஷீதகம், இந்த 9-ம் அபாசூததிரங்கள். ஆக சூத்திரங்கள் 18-ஸம்ஸ்காரங்களும் 18-என்றூர். இங்கு விசாரிக்க வேண்டியது ஒன்றுண்டு பூர்வஸூத்திரங்கள் 9. அபாசூத்திரங்கள் 9. என்றவிடததிலுள்ள பூர்வ அபா என்பதின் அர்த்தம் யாது ? முன் ஸூத்ரம் பின் ஸூத்திரமென்று. அதாவது முன்னுலியற்றப்பட்டன பின்னுலியயற்றப்பட்டனவென்று. அல்லது முற்கூறப்பெற்றவர்கள் முற்காலத்திலிருந்தவர்கள் பின்னர் பின்னுலுதித்தவர்கள் என்று, அல்லது பூர்வமான கர்மாக்களை சொல்வது பூர்வமென்றும் அபரமான ஔர்த்வதைஹிகக்கிரியைகளைக் கூறுவதென்று, என்றுல் முதலிற் கூறியதல்ல. எனெனில் முன்னுல் இயற்றப்பட்ட போதாயனுதி சூத்திரங்களிலும் தர்ப்பணுதிகளும், பின்னற் கூறப்பெற்ற ரிஷிகளது பெயரைக் காண்கிறேம். அவ்விதமே பின் ஸூத்திரக்காரர்களும் கூறுகின்றனர் என்பதால்தான். இரண்டாவதைக் கூறுவாம்மென்றுல் அதுவுமன்று. முற்கூறும் நியாயத்தாலே இவர்கள் யார் முந்தியவர். பிந்தியவர் யாரென்று இதுகாறும் எவராலும் நிச்சயிக்கப்படவில்லையென்பதால் இனி மூன்றுவதுமொவ்வாது. ஒவ்வொருவருமே பூர்வம் அபரம் இரண்டையும் ஸம்பூர்ணமாய்க்கூறியே இருக்கின்றனர். இனி என்ன வழி யென்றுல் பூர்வமென்றும் அபரமென்றும் காரணமில்லா இடுகுறிப் பெயர்தான் என்றுதான் ஒப்புக்கொள்ளவேண்டும்.

(தொடரும்) M. N. சுப்ரம்மண்ய சாஸ்திரி.